# தமிழர் பண்பாட்டில் காதல்

**ம. சுப்பராயன்**

**முனைவர் பட்ட ஆய்வாளர், பெரியார் சிந்தனை உயராய்வு மய்யம்,**

**முனைவர் ந. லெனின்,**

**ஆய்வு நெறியாளர், பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம், வல்லம், தஞ்சாவூர்.**

30

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர் பண்பாட்டில் மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதைவிட, எப்படி வாழக்கூடாது என்ற வாழ்வியலை கற்றுக்கொடுத்த தமிழரின் பண்பாட்டு அரிச்சுவடுகள் இன்றும் உலகம் முழுவதிலும் தடம் பதித்து இருக்கிறது. நாடாண்ட மன்னன் முதல் குடிசையில் வாழும் சாதாரண குடிமகன் வரை, குலம் காக்கும் பண்பாட்டைக் கட்டிக்காத்து பார்போற்றும் அளவில் வாழ்ந்த இனம் தமிழ் இனம் ஆகும்.

தமிழர்களின் பண்பாட்டில் முக்கிய கூறுகளுள் ஒன்று காதல். இந்தக் காதலை மக்கள் விரும்பிப் போற்றினர். காதல் என்பது ஒரு வகை ஈர்ப்பு என்றபோதிலும், அதற்கு அன்பு, நாட்டம், ஆர்வம் என்றுகூட பொருள் கொள்ளலாம். வயது வந்த ஆணும் பெண்ணும் சந்தித்து தங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொண்டு, ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நடப்பதே காதல் என்றும், இத்தகைய புரிதலுக்குப்பின், திருமணம் செய்துகொண்டு வாழலாம். காதல் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட பருவம் என்று மட்டும் கொள்ளாமல், வாழ்க்கையின் இறுதி வரை கடைப்பிடித்து வாழலாம். “முதுமைபெற்ற காதலெல்லாம், முதுமைவரை கூடிவரும்” என்ற திரைப்படப் பாடல் வரிகள் இங்கு நோக்கத்தக்கது. திருக்குறளிலும், சங்க இலக்கியங்களிலும் தமிழரின் காதல் பற்றி உள்ள பாக்கள் சுவைத்து மகிழத்தக்கதாகும். ஒருதலைக் காதல் என்பது கைக்கிளையும், பொருந்தாக் காமம் என்பது பெருந்திணையும் தமிழர் பண்பாட்டின் ஒரு அங்கமாக விளங்கி உள்ளது. இவை மட்டுமல்லாமல் திருக்குறள் என்ற நீதி இலக்கியத்திலும் காதல் குறித்த பதிவுகளும், சங்க இலக்கியத்தில் காதல் குறித்த பண்பாட்டுப் பதிவுகளும் காணப்படுகின்றன.

**தரவுச் சொற்கள்**

அலம்பல், அலர்- தூற்றுதல், உடன்போக்கு, ஊடினாள், கரணம், கூடல்-இருத்தல் கைக்கிளை – பெருந்திணை.

**முன்னுரை**

தமிழர்கள் காதல், மானம், வீரம் ஆகிய நெறிகளை போற்றி வாழ்ந்தார்கள். சாதாரண நிலையில் உள்ள மனிதன் முதல் அரசன் வரை காதலை புனிதமாகவும், ஒழுக்க நெறியாகவும் கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை சங்க இலக்கிய நூல்களுள் குறுந்தொகை, நற்றிணை, பரிபாடல் நூல்கள் காதல் நெறியை நயம்பட எடுத்துரைக்கின்றன. உலகப்பொதுநூல் திருக்குறள், இன்பத்துப்பாலில் 25 அதிகாரங்களில் காதல் என்பதை களவியல், கற்பியல் என்று இரு இயல்களில்

பாக்களை கொண்டுள்ளது. இந்நூலில் இன்பத்துப்பால், ஆணோ, பெண்ணோ இருவருமோ படித்து காதல் சுவை நுகரத்தக்கதாக உள்ளது. திருக்குறளை மொழிப்பெயர்த்த மேலைநாட்டினர், இன்பத்துப்பால் குறள்களை அதன் கருத்து வளத்துக்காகவும், நுண்ணிய அழகியல் கருத்துக்களுக்காகவும் மிகவும் போற்றுகின்றனர். உலக இலக்கியங்களில்கூட இன்பத்துப்பாலில் உள்ள கருத்துக்கள் இல்லை என்றே அவர்கள் பெருமிதம் கொள்கிறார்கள். அந்த வகையில் தமிழர் பண்பாட்டில் காதல் இலக்கியங்கள் எவ்வாறு இருந்தது என்ற வினாவிற்கு விடை காணும் நோக்கில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

**பண்பாடு- விளக்கம்**

"பண்பாடு என்பது பாடறிந்து ஒழுகல்" என்று கலித்தொகை குறிப்பிடுகின்றது. பண்பாடு அல்லது கலாச்சாரம் என்பது, நாம் முன்னோர்களின் வழிவழியாக பின்பற்றி வந்த நடைமுறைகள் செயல்முறைகள் ஆகும். இது காலத்திற்கு காலம் சூழ்நிலைக்கேற்றவாறு மாறக்கூடியது. அதே வேளையில் மானுடத்தின் நலனை பாதிக்காத வகையில் அமையக்கூடியதாகும். இப்பண்பாடு அறிவு, காதல், வீரம், உணவு, இசை, சமய நம்பிக்கைகள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு என்பனவற்றை சுற்றி நிற்கின்றது. மேலும் நம்முடைய குடும்ப உறவு முறையை பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

**தமிழர் பண்பாடு**

தமிழர்களின் பண்பாடு தனித்தன்மை உடையதென இருப்பினும் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகள், காதல், வீரம், மானம், நட்பு, விருந்தோம்பல், ஈகை, கொடை, கற்புடைமை, உலக ஒருமைப்பாடு எனப் பல வடிவங்களில் விளங்குகின்றன. பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம்; நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை. முன்னது அகக்கூறு பின்னது புறக்கூறு. நாகரிகம் சேர்ந்த பண்பாடு உண்டு. நாகரிகம் இல்லாத பண்பாடும் உண்டு. தமிழர் பண்பாடு இவ்விரண்டிலும் மெச்சத்தகுந்தது! தமிழர் வாழ்வை அகவாழ்வு; புறவாழ்வு என இரண்டாக இலக்கணம் வகுத்து வாழ்ந்தமை பண்பாட்டின் சிகரமாகக் கருதப்படுகிறது. தான் தோன்றிய கால மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறை, அரசு, அமைச்சர், ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை காட்டி நிற்கின்றன. தமிழ் கலாச்சாரம், தமிழ் மக்களின் பண்பாடு ஆகும். இந்த காலாச்சாரம் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்றி உள்ளது.

**காதல் பண்பாடு**

காதல் என்பது பால் உணர்ச்சியால் பருவமுற்ற ஆணும் பெண்ணும் ஒருவர்பால் ஒருவர் கொள்ளும் ஈடுபாடு. ஒரே சமயத்தில் இருவர்மீதும் ஏற்படும் ஒருவித ஈர்ப்பு அல்லது வேட்கையாகும். மற்றவர்கள் அறியாதவாறு காதலர்கள் தங்கள் பார்வையால் அன்பை பரிமாறிக் கொள்வார்கள். காதல் என்பது உயிரோடு பிணைந்தது. காதலர் நினைத்தவாறு திருமணம் முடியாவிட்டால் இறப்பைத் தேடிக்கொள்ளவும் அஞ்சமாட்டார்கள். காதல் கொண்ட உள்ளம் மாறுவதோ, விட்டுக்கொடுப்பதோ இல்லை. உலகெங்கினும் எல்லா பண்பாடுகளிலும் காதல் உறுதியானதாகவும், தெய்வீகமானதாகவும்

இருக்கிறது. அப்படியானால் தமிழர் பண்பாட்டில் காதலுகென்று ஒரு சிறப்பிடம் உள்ளது.

மனம் ஒன்றுபட்ட காதலர்கள் போன பிறவியிலும் கணவன் மனைவியாக வாழ்ந்தவர்கள்தான் இந்த பிறவியிலும் கணவன் மனைவியாகிறார்கள். இனிவரும் பிறவிகளிலும் இவர்களே கணவன் மனைவியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை தமிழர் பண்பாட்டில் உள்ளது. இதனை

"அணிற்பல் அன்ன கொங்குமுதில் மூண்டகத்து
மணிக் கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின்நெஞ்சு நேர் பவளே"[1]

என்ற குறுந்தொகை பாடல் கூறுகின்றது.

**களவும் கற்பும்**

திருமணத்திற்கு முன் ஒருவனும் ஒருத்தியும் பிறர் அறியாதவாறு காதல் கொள்வர். இதனை தமிழர் பண்பாடு களவேள் என்று போற்றுகின்றது. தலைவியின் தோழி களவுக் காதலுக்கு துணை செய்வாள். மெல்ல மெல்ல களவு காதலை ஊரார் அறிவர்; அறிந்து மூக்கில் விரல் வைத்து ரகசியமாக பேசுவர். ஊரார் இவ்வாறு மறைமொழியாகப் பேசும் நிலை "அலம்பல்" எனப்படும். பின்னர் எல்லாரும் அறியுமாறு தலைமக்களின் காதலைப் பேசுவர். இதனை, அலர் தூற்றுதல் என்பர். இந்நிலையில் தோழியும் தலைவியும் தலைவனை, திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய தூண்டுவர். தலைவியின் காதல் அறிந்த பெற்றோர் தலைவியை வீட்டிலேயே வைத்து பாதுகாப்பர். பெற்றோர் முதலில் களவு காதலை அனுமதிக்கமாட்டார்கள். பின்பு தலைமக்களின் உள்ள உறுதி அறிந்து உடன்படுவர். உடன்படாத நிலையில் தலைவனும், தலைவியும் யாரும் அறியாதவாறு வேற்றூர் செல்வர். இதற்கு "உடன்போக்கு" என்று பெயர்.

**கற்பு**

திருமணத்திற்கு பிறகு நிகழும் வாழ்க்கையை கற்பு என்று கூறுவர். கற்பு என்பதற்கு கல்வி என்பதே பொருள். ஒன்றுமறியாத பேதையாக இருந்த தலைமகள், எப்படி இதையெல்லாம் கற்றுக்கொண்டால் என்று வியந்து பேசுவர். தலைவன் வீட்டில் வசதியற்ற சூழ்நிலை இருப்பினும், அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வாள். தன் முய்ற்சியால் அந்த குடும்ப நிலையை உயர்த்துவாள். பிறந்த வீட்டிற்கும் பாலமாக இருந்து செயல்படுவாள். இதனால் உறவுமுறை பெருகி, இரு குடும்பத்தாரும் மற்றும் அவரைச் சேர்ந்த உறவுகளும் மகிழ்ச்சியாக வாழ்வார்கள்.

**திருமணம்**

திருமணம் என்பது ஒரு சடங்கு. ஒருவனையும், ஒருத்தியையும் கணவன், மனைவி என ஆக்கும் இந்நிகழ்ச்சி ஒரு பண்பாட்டின் அடையாளம். மிகப் பழங்காலத்தில், ஆண் பெண்ணுக்கு தாலி கட்டுதல் இல்லை. வீட்டிற்கு முன்பு இட்ட திருமணப் பந்தலில் மணமக்களை நீராட்டுதல், மக்களை பெற்ற மூத்த மகளிர், நெல்லும் மலரும் தூவி வாழ்த்துதல், உளுந்தால் செய்யப்பட்ட களியை எல்லோக்கும் வழங்குதல் போன்ற நிகழ்வுகள் கி.பி.இரண்டாம் நூற்றாண்டில் தமிழர்கள் பின்பற்றி உள்ளார்கள்.

இப்போது உள்ள திருமணம் என்பது தீ வளர்த்தல், தீயை வலம் வருதல், பார்ப்பணர் மந்திரம் ஓதல், அம்மி மிதித்து அருந்ததி காட்டுதல் போன்ற வழக்கங்கள் கொண்டதாகும். 20ஆம் நூற்றாண்டில் இந்த நிலை மாறி பகுத்தறிவு சார்ந்த திருமணங்களாக மாறி நடைமுறையில் இருந்து வருகின்றதை அறிய முடிகின்றது.

**திருக்குறளில் காதல் பண்பாடு**

இன்பத்துப்பாலில் உள்ள அதிகாரங்களில் காதல் ஒழுக்கம் – புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்து வகைகளில் அழகாக விளக்கப்பட்டுள்ளது. தலைவன், தலைவியிடம் ஒரு சூழலில் இப்பிறவியில் உன்னை பிரியமாட்டேன் என்கிறான். அதற்கு கோபித்துக்கொண்டு இந்தப் பிறவியிலேயே பிரியமாட்டேன் என்றால் அடுத்த பிறவியிலே கைவிட்டுவிடுவீர்களா? அடுத்த பிறவியிலே நான் தேவையில்லை அப்படித்தானே! உன்னுடைய அன்பையம் காதலையும் கண்டு நான் ஏமாந்து போய்விட்டேன் என்று அழுகிறாள். இதனை திருவள்ளுவர்

"இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணீரை நீர்கொண்ட நள்"[2]

என்ற குறளில் கூறியுள்ளார். இதிலிருந்து தலைவி தலைவனிடம் கொள்ளும் காதல் வாழ்க்கை முழுவதும் தொடர வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. இதனை நாமெல்லாம் நினைந்து நினைந்து இன்புறத் தக்கதாகும்.

இன்னொரு சூழலில் தலைவன் தலைவியிடம், எனக்கு வேறு யாரிடத்திலும் காதல் இல்லை. நான் உன்னை மட்டும்தான் காதலிக்கிறேன் என்றான், உடனே தலைவி தலைவனை நோக்கி மற்றவரிடத்திலே காதல் இல்லையா? யார் அந்த மற்றவர்கள்? யார் யாரைவிட என்னிலே அதிகம் அன்பு, அவர்களின் பெயரை சொல்லுங்கள். இன்னும் எத்தனைபேர் எனக்கு பின்னாலே உங்களினரை மனதிலே இருக்கின்றார்கள் என்று அவள் கோபமுற்று, துயரடைந்து அழுகிறாள். இதனை திருவள்ளுவர்

"யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று"[3]

இதிலிருந்து தலைவியானவள் தலைவனிடம் கொண்ட உண்மையான காதலை ஊடல் மூலம் வெளிப்படுத்துவதை அறியலாம். இன்னொரு சூழலில் தலைவன் தலைவியை உன்னை எத்தனை தடவைகள் நினைத்துப் பார்த்திருப்பேன் தெரியுமா என்று கேட்கிறான். உடனே அவள் அடிக்கடி நினைக்கிற அளவுக்கு அடிக்கடி என் நினைவு மறந்துபோகிறது அப்படித்தானே! பாவம் பேசாமல் விடுவோம் என்று பார்த்தேன். இப்போதுதானே தெரியுது என்னை மறக்கின்ற அளவுக்கும் நிலைமை வந்தாச்சு என்று அவனை லேசான சங்கடத்துக்கு அவனை உள்ளாக்குகிறாள். இதனை திருவள்ளுவர்,

"உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றுஎன்னைப்
புல்லாள் புலத்த கனள்"[4]

என்ற குறளில் தலைவி தலைவனிடம் ஊடல் கொள்வதை அறிந்து மகிழலாம்.

இன்னொரு சூழலில் தலைவனுக்கு தும்மல் வந்துவிட்டது. தும்மினான், உடனே உம்முடைய

பழைய ஆட்கள் யாரோ நினைக்கிறார்கள். அதுதான் தும்முகிறீர்கள் என்றால். அடுத்து வந்த தும்மலை அவன் அடக்கிப் பார்த்தான். உடனே அவள், உன் ஆள் நினைக்கிறதை தும்மலை அடக்கி ஏன் எனக்கு மறைக்கிறீர்கள் என்று சத்தம் போட்டு அழுதாள் இதனை திருவள்ளுவர்,

"தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்தீரோ என்று"[5]

என்ற குறளில் தலைவி தலைவனிடம் கொண்ட சாதாரண ஊடலை முக்கியத்துவமாக எடுத்துக்கொண்டு விளக்குவதை அறிந்து இன்புறலாம். மேலும் வா.சுப. மாணிக்கனார் குறிப்பிடுகிறார்.

ஒருவரை ஒருவர் விரும்பிய இளைஞனும் இளைஞியும் "கரணம்" என்னும் திருமணச் சடங்கிற்கு பின்னர், தங்குதடையின்றி உடலுறவு இன்பத்தை துய்ப்பர் என்பதை பின்வரும் தொல்காப்பிய நூற்பா குறிப்பிட்டுள்ளது.

"கரணத்தின் அமைந்து முடிந்த காலை
நெஞ்சுதனை அவிழ்ந்த புணர்ச்சி"[6]

களவு காலத்தில் தயக்கத்துடன் காதலர்கள் அனுபவித்த கலவி இன்பம், மனச்சடங்கு பலரறிய முடிந்த பின்னர், கற்பு காலத்தில் கட்டற்றுப் பொங்குகிறது என்பது இந்நூற்பாவின் பொருளாகும்.

**இக்கால இளைஞர்கள் பின்பற்றும் தவறான காதல் கோட்பாடும் அதற்கான தீர்வும்**

இக்காலத்தில் இளைஞர்கள் காதலை புனிதமாகவும் உணர்வு உள்ள தன்மையாகவும் கருதாமல் வாழ்கிறார்கள். அவர்கள் கருதுவது எல்லாம் காதலை காமநோக்கில் பார்த்து அனுபவிக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அத்தகைய நிலையை அடையாதபோது, வெறித்தனத்துடன் செயல்பட்டு, உடன்பாட்டுக்கு வராத பெண்ணுக்கு கொடூர துன்பங்களையும் கொடுக்கிறார்கள். சில சமயங்களில் கொள்ளவும் துணிகிறார்கள். இதனால் தன்னுடைய வாழ்வு சூன்யமாகிவிடும் என்பது பற்றி அறியாதவர்களாய் இருக்கிறார்கள். இத்தகைய இளைஞர்களுக்கும், இளைஞிகளுக்கும் பெற்றோர்களும் மூத்தோர்களும் நல்ல அறிவுரைகளை கூறி இளமையிலிருந்தே வளர்க்க வேண்டும். இதற்காக அவர்களுடன் பேசுவதிலும், அவர்களின் நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்தி வளர்ப்பதுடன், அன்பும் அரவனைப்பும் அவர்களிடம் அதிகமாக காட்ட வேண்டும். பருவகாலத்தில் இதனால் வயது வந்த பிள்ளைகள் பெற்றோர்களுடன் காதல், திருமணம் பற்றியெல்லாம் பேசி சிறப்பான முடிவு எடுக்க முடியும். இதனால் இளைஞர்கள் சமுதாயமும் சீராக செயல்பாடும். சமூக கொடுமைகள் அறவே நிகழாது.

**முடிவுரை**

தமிழர் பண்பாட்டில் காதல் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. காதல் உணர்வுகளை நம்மை சுற்றியுள்ள உயிரினங்களும் நமக்கு அறிவுறுத்துவனவாக உள்ளன. அவைகள் குறைவான எண்ணிக்கையில் அறிவை பெற்றிருந்தாலும் அவைகளால் யாருக்கும், குறிப்பாக மனித இனத்திற்கு துன்பம் இல்லை ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் காதலைப் பற்றி சரியாக புரிதல் இல்லாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற உலப்பாங்கில் செயல்பட்டு சீரழிந்துவிடுகின்றனர்.

காதலால் உயர்வு அடைய வேண்டும். காதலால் உலகு செழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனித இனம் செயல்பட்டு மேன்மை நிலையை அடைய வேண்டும் அதற்கு திருக்குறள் மற்றும் சங்க இலக்கிய நூல்கள் பயன் உள்ளதாக அமையும்.

**அடிக்குறிப்பு**

1. குறுந்தொகை பாடல் 49
2. குறள் : 1315, அதிகாரம் : புலவிநுணுக்கம்
3. குறள் : 1314, அதிகாரம் : புலவிநுணுக்கம்
4. குறள் : 1316, அதிகாரம் : புலவிநுணுக்கம்
5. குறள் : 1318, அதிகாரம் : புலவிநுணுக்கம்

**துணைநூற்பட்டியல்**

1. பசுபதி.ம.வே, செம்மொழி தமிழ், 2010, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்.
2. புலவர் குழந்தை, திருக்குறள் புலவர் குழந்தையுரை, 2005, வெளியீடு: சாராதா பதிப்பகம், ஜீ-4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை-14
3. நாவலர் நெடுஞ்செழியன்.இரா, திருக்குறள் நாவலர் உரை, 1991, வெளியீடு: நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை 4, மாசிலாமணித் தெரு, சீத்தம்மாள் குடியிருப்பு, ஆழ்வார்பேட்டை, செனை – 600018.
4. வ.சுப.மாணிக்கம் – தமிழ்க் காதல்.